

AISHWARYAM
TRUST ®

# Aishwaryam Trust

**Palliative rehabilitation of destitute, abandoned, older persons**

## நாங்கள் யார்

ஐஸ்வர்யாம் அறக்கட்டளை 2014ம் ஆண்டு ஏழைகள், ஆதரவற்றவர்கள், கைவிடப்பட்டவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட முதியோர்களுக்கு தொழில்முறை மருத்துவ மற்றும் தொண்டு உதவிகளை வழங்க மருத்துவர்கள் குழுவால் நிறுவப்பட்டது.

ஐஸ்வர்யம் அறக்கட்டளையானது தீர்க்கவியலா நோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியைச் செய்கிறது. மேலும் சமூக நல சுகாதாரம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு, கைவிடப்பட்ட அல்லது ஆதரவற்ற முதியவர்களை மீட்டு மறுவாழ்வளிக்கும் பணிகளில் அறக்கட்டளை கவனம் செலுத்துகிறது

ஒருவரின் சாதி, சமயம், சமூகப் பொருளாதார நிலை போன்றவற்றைப்பாராமல் ஒருவரின் தேவையை மட்டும் கருத்தில் கொண்டு சேவை செய்து வருகிறோம்.

## எங்கள் சேவைகள்

நாங்கள் நேத்ராவதி நோய்த்தீவிரம் தணிப்பு, வலி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு மையம் எனும் பெயரில் 75 படுக்கைகள் கொண்ட சிகிச்சை மையத்தை நடத்தி வருகிறோம்.

இங்கு இடைவிடா மருத்துவம், இயன்முறை சிசிக்கை காயம் ஆற்று செவிலியம், உளவியல் ஆறுப்படுத்துதல் போன்றவற்றுடன் உணவு மற்றும் தங்குமிட சேவைகளையும்
வழங்குகிறோம்.

தேவைப்படுவோருக்கு, குறிப்பாக தொலைதூர கிராமங்களில் மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்து, மருத்துவத்தை நாடும் நடத்தையையும் சுகாதார விழிப்புணர்வையும் மற்றும் தேவைப்படுவோருக்கு தொடர் சிகிச்சை உதவியும் வழங்குகிறோம்.

சமூகப் பணி மாணவர்கள், இளைஞர்கள், ஒத்த எண்ணம் கொண்ட அரசு சாரா அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் பயிற்சிகள் வழங்குகிறோம்.

## நீங்கள் எவ்வகையில் உதவ முடியும்

கடந்த ஏழு ஆண்டுகளாக மதுரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் ஆதரவினால் எங்கள் சேவைகளால் தேவையுள்ளோர் பயனடைந்துள்ளனர்.

இதுவரை உங்களின் உயர்ந்த சேவை மனப்பான்மையால் 700 க்கும் மேற்பட்ட நோய்த் தீவிரமுள்ளவர்களை பராமரித்து வந்துள்ளோம்.

100க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்தது,120 நோயுற்ற நோயாளிகளுக்கு மாண்புடைய இறுதிக்கால சேவையை வழங்கியுள்ளோம். 80 ஆதரவற்றோரின் இறுதிச் சடங்கினைச் செய்துள்ளோம்.

இன்னும் உங்களின் மேலான பங்களிப்பினால் எண்ணற்ற நோய்த்தீவீரமுள்ள ஆதரவற்றவர்களுக்கு மருத்துவம் மற்றும் பராமரிப்பு சேவையாற்ற முடியும்.



## சட்ட அங்கீகாரம்

இந்த அறக்கட்டளை 1882ம் ஆண்டின் இந்திய அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது (பதிவு எண் : 116/2014)

வருமானவரி பிரிவு 12AA மற்றும் 80G வருமான வரி சட்டம் 1961 இன் கீழ் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணய ஒழுங்குமுறைச் சட்டம் 1976 கீழ் வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற தகுதியுடையோர் எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது (பதிவு எண் : 075940613/2018).

புதிய கூட்டாண்மை முறையின் கீழ் இந்திய அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## அறங்காவலர் குழு


1. **மரு.ஆர்.பாலகுருசாமி** : நிர்வாக அறங்காவலர்
2. **மரு.ஆர்.அமுதநிலவன்** : நிதி அறங்காவலர்
3. **மரு.எஸ்.சபரிமணிகண்டன்** : அறங்காவலர் & பொறுப்பாளர் முதியோர் மருத்துவம்
4. **மரு.பி.வெங்கடேஷ்** : அறங்காவலர் & பொறுப்பாளர் நரம்பியல் நோய் நோய்த்தீவிரம் தணிப்பு & நரம்பியல் மறுவாழ்வுத்துறை
5. **மரு.ஸ்ரீ வித்யா மஞ்சுநாத்** : அறங்காவலர் & பொறுப்பாளர் பெண்கள் & குழந்தை நலம்
6. **மரு.ச.சதீஷ்** : அறங்காவலர் & பொறுப்பாளர் நோய்த் தொற்று & தரக்கட்டுப்பாடு
7. **மரு.ஜி.பிரபுராம் நிரஞ்சன்** : அறங்காவலர் & பொறுப்பாளர் வலி மேலாண்மை & நோய்த்தீவிரம் தணிப்பு


## எதிர்காலத் திட்டம்

- மேலும் 100 நோயாளிக்கு இடமளிக்கும் வகையில் உள்கட்டமைப்பை உருவாக்குதல்
- மருத்துவ சேவை விரிவாக்குதல்
- மூளை வளர்ச்சிகுன்றிய குழந்தைகளுக்கான மூளைநரம்பியல் மையம், மூளை நரம்பு உளநோய் மையம் அமைத்தல்.
- டயாலிசிஸ் / சிறுநீர்கழிவகற்றல் மையம் அமைத்தல்
- யோகா மற்றும் தியான மையம் அமைத்தல்

## வங்கித் தகவல்கள்

**உள்நாட்டு பரிவர்த்தனை :**

| | |
|---|---|
| கணக்குப் பெயர் | : **ஐஸ்வர்யம் டிரஸ்ட்** |
| வங்கியின் பெயர் | : இந்தியன் வங்கி திருநகர் கிளை, மதுரை. |
| கணக்கு எண் | : 6639017788 |
| IFSC Code | : IDIB000T032 |

**வெளிநாட்டுப் பரிவர்த்தனை**

| | |
|---|---|
| கணக்குப் பெயர் | : AISHWARYAM TRUST |
| வங்கியின் பெயர் | : State Bank of India |
| கணக்கு எண் | : 40309689242 (FCRA SAVING ACCOUNT) |
| IFSC Code | : SBIN0000691 |
| SWIFT | : SBININBB104 |
| ADDRESS | : FCRA Cell, 4th Floor, State Bank of India, New Delhi Main Branch 11, Sansad Marg, New Delhi -110001 |



.... **உங்களது பிறந்தநாள், திருமண நாள் அல்லது முன்னோர்களின் நினைவு நாளை கொண்டாடும் விதமாக ஒரு வேளை (அ) ஒருநாள் முழுவதும் உணவு வழங்கி மூத்தவர்களின் ஆசியை பெறலாம்.**

.... **தினசரி மருத்துவ தேவைகளை நிறைவேற்ற முன்வரலாம்.**

.... **சேவை விரிவாக்க உள்கட்டமைப்புகளை உருவாக்க**

..... **தனியாக அல்லது கூட்டாக உதவலாம்.**

..... **தன்னார்வலராக பணியாற்ற முன் வரலாம்.**


AISHWARYAM TRUST

**ஐஸ்வர்யாம் அறக்கட்டளை 3/539B,** ஆதிசிவன் நகர், விளச்சேரி, மதுரை-625006, தமிழ்நாடு

**தொலைபேசி எண் : 045 248 2747  7540050088**

Website : www.aishwaryamtrust.org

email : aishwaryamtrustmdu@gmail.com